[2015 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கு குட்டைகள் இல்லை. ஆனால் வருவாய்த் துறையினுடைய ரெக்கார்டுகளிலே கசம் புறம்போக்கு நிலப்பரப்பாக இருப்பதனாலே உரிய அனுமதியை உரிய துறையிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல பயன்பாட்டிற்கு ஏற்ற இடமாகவும், ஏ1 நோட்டீஸ் கொடுக்கின்றபோது எந்தவிதமான மக்களுடைய எதிர்ப்பும் இல்லை என்பதும் அதிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உரிய அனுமதி பெற்று, அங்கு உரிய கட்டடம் கட்டினால்தான் பிற்காலத்திலே எந்த எதிர்ப்புகளும் வராமல் இருக்கும் என்ற அடிப்படையிலேதான் தொலைநோக்குச் சிந்தனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற நல்லரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

தரம் உயர்த்துதல்

***46216—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம்*

2015 மார்ச் 27]

பணிந்து என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூர் ஒன்றியத்தில் இயங்கிவரும் விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளான போதிய இடவசதி இல்லாததாலும், பொதுமக்கள் பங்களிப்பான ரூபாய் 2 இலட்சம் செலுத்தப்படாததாலும் மேற்குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 313 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். கிட்டத்தட்ட 80 சதவீதம் மாணவ, மாணவிகள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், மன்னார்குடிக்கு 25 கிலோ மீட்டர் தூரம், திருத்துறைப்பூண்டிக்கு 20 கிலோ மீட்டர் தூரம், கோட்டூருக்கு 10 கிலோ மீட்டர் தூரம் என்று நீண்ட தூரம் செல்லவேண்டிய சூழல் இருக்கிறது. ஆகவே, விக்கிரபாண்டியத்தைச் சுற்றியிருக்கக்கூடிய ஆலாத்தூர், பள்ளிவர்த்தி, திருநெல்லிக்காவல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் நலன் கருதி, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்தக் கோரும் பள்ளிகளுக்கு மாநகராட்சி என்றால் 6 கிரவுண்ட் இடமும், மாவட்ட தலைமை இடங்களில் 8 கிரவுண்ட் இடமும், நகராட்சியில் 10 கிரவுண்ட் இடமும், பேரூராட்சியில் ஒரு ஏக்கர் நிலமும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 3 ஏக்கர் நிலமும் இருக்கவேண்டும். அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொது மக்கள் பங்களிப்புத் தொகையான ரூபாய் 2 இலட்சம் செலுத்தியுள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மலைப் பகுதி, ஆதி திராவிட மக்கள்தொகை அதிகம் உள்ள இடங்களில் இயங்கிவரும் பள்ளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருக்கவேண்டும். ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். மக்களுக்கு அதிகமாகப் பயன்படும் இடங்களைக் கருத்தில்கொண்டு, அந்தந்த மாவட்டத்திலுள்ள பிற்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் அதிகம் பயனடைவதையும் கருத்தில்கொண்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.*

திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட, கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளி மேற்குறித்த நெறிமுறைகளை நிறைவு செய்யாததால் மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாது. இருப்பினும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இப்பள்ளியைத் தரம் உயர்த்தக் கோருவதால், பள்ளிக்குத் தேவையான இட வசதியும், பொது மக்கள் பங்களிப்பான ரூபாய் 2 இலட்சத்தையும் அரசுக் கணக்கில் செலுத்தும்பட்சத்தில், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, விளக்குடி உயர்நிலைப் பள்ளியில், இராயநல்லூர், பனையூர், திருப்பத்தூர், கீரக்களூர், குன்னூர், கூத்தடிமூலை, பள்ளங்கோயில் ஆகிய*

2015 *மார்ச்* 27]

நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் வந்து சேர்ந்து படிக்கின்றார்கள். இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் திருத்துறைப்பூண்டி அல்லது கோட்டூருக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. 490 மாணவர்கள் அங்கு படிக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் 80 சதவீதத்திற்கு மேலே அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றார்கள். ஆகவே, அந்தப் பள்ளி மாணவர்கள் நலன் கருதி விளக்குடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 313. ஆறாம் வகுப்பில் 30 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 38 மாணவர்களும், 8 ஆம் வகுப்பில் 58 மாணவர்களும், ஒன்பதாம் வகுப்பில் 92 மாணவர்களும், பத்தாம் வகுப்பில் 95 மாணவர்களும் படித்து வருகிறார்கள். இப்பள்ளியின் மொத்தப் பரப்பளவு 25 ஆயிரம் சதுர அடி. கிட்டத்தட்ட அரை ஏக்கருக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இப்பள்ளியில் மொத்தம் ஏழு வகுப்பறைகளும், ஓர் ஆய்வுக் கூடமும் உள்ளன. விக்கிரபாண்டியத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் கோட்டூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அதேபோன்று அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. விக்கிரபாண்டியத்திற்குக் கிழக்கே 8 கி.மீ. தொலைவில் ஆலத்தம்பாடியில் ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. விக்கிரபாண்டியத்திற்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் குள்ளமங்கலத்தில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. விக்கிரபாண்டியத்திற்கு 15 கி.மீ. தொலைவில் திருத்துறைப்பூண்டியில் ஓர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஓர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. தரம் உயர்த்துவதற்கு செலுத்தப்படவேண்டிய பங்குத்தொகையை*

இதுநாள் வரையிலும் பொதுமக்கள் செலுத்தவில்லை, இடவசதியும் மிகவும் குறைவாக இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஆய்வுசெய்து, இடம் ஏதாவது அருகில் அரசிற்கு கிடைக்கும்பட்சத்தில் அதை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு, பரிசீலனை செய்து, வருகின்ற காலங்களில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

தேனீ வளர்ப்புத் தொழில்

***21307—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய், மூன்றும் ஒருங்கிணைந்த தெய்வத் திருமகளாய்த் திகழும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, என்னுடைய பதிலை வழங்குகிறேன்.*

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக தமிழ்நாட்டில் சமவெளிப் பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் தஞ்சை மாவட்டமும் ஒன்றாகும். அதனடிப்படையில், தஞ்சை